பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 10 2025 FRIDAY 12.40 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்க நாட்டு மக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
- சர்தார் வல்லப்பாய் பட்டேலின் 150-ஆவது பிறந்த தினத்தையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.
- இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்புத்துறையில் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- பீகார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் அறிக்கையை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இன்று வெளியிட்டது.
- இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்க நாட்டு மக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ஆவது பிறந்த தினத்தையொட்டி, குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் நடவடிக்கை மூலம் நக்சல் தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த 2014-ஆம் ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது மத்திய அரசின் நடவடிக்கைமூலம் 11 மாவட்டங்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி இன்று கோடிக்கணக்கான மக்கள் உறுதிமொழி ஏற்றுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நாடு சுதந்திரம் அடைந்தபோது 550-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததில் சர்தார் பட்டேலின் பங்கு முக்கியமானது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்நாளையொட்டி, குஜராத்தில் உள்ள ஒற்றுமை சிலை அருகே வண்ணமிகு அணிவகுப்பும், பல்வேறு மாநிலங்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சுதந்திரத்திற்குப் பிறகு தேசத்தை ஒன்றிணைக்கும் வரலாற்றுப் பணியை நிறைவேற்றியவர் சர்தார் வல்லப்பாய் பட்டேல் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தில்லியில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு அவர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்தியாவை ஒருங்கிணைத்து ஜனநாயக நாடாக மாற்றுவதில் சர்தார் வல்லபாய் பட்டேலின் பங்கு இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேசப்பற்றுக்கும், நாட்டை ஒருங்கிணைத்ததிலும் சர்தார் பட்டேலின் அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பை நினைவுகூர்வதாக கூறியுள்ளார்.

சர்தார் வல்லப்பாய் பட்டேல் சமஸ்தானங்களை ஒன்றிணைத்ததன் மூலம் நாட்டின் ஒற்றுமையையும், பாதுகாப்பையும் வலுப்படுத்தினார் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய ஒற்றுமை ஓட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், நாட்டின் சுதந்திரத்திற்காகவும், ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்குவதற்காகவும் பாடுபட்ட சர்தார் பட்டேலின் பங்களிப்பு மகத்தானது என்று தெரிவித்தார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் சுதந்திரத்திற்கும், தேசிய ஒற்றுமைக்குமான சர்தார் பட்டேலின் பங்களிப்பு உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

வளமான, வலிமையான இந்தியாவை உருவாக்குவதில் அவரது தியாகம் போற்றுதலுக்குரியது என்று அவர் தெரிவித்துள்ளார்.

சர்தார் பட்டேலின் பிறந்த தினத்தையொட்டி, நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் இன்று நடைபெற்ற தேசிய ஒற்றுமை தின விழாவில் முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு வெங்கையா நாயுடு, மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி உள்ளிட்டோர் சர்தார் வல்லபாய் பட்டேலின் திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

அம்மாநிலத்தில் உள்ள 33 மாவட்டங்களிலும் தேசிய ஒற்றுமை தின ஓட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒடிஷா மாநிலத்தில் முதலமைச்சர் திரு மோகன் சரண் Majhi தலைமையில் தேசிய ஒற்றுமை தின ஓட்டம் நடைபெற்றது.

மணிப்பூரில் ஆளுநர் திரு அஜய் குமார் தலைமையில் தேசிய ஒற்றுமை தின நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்தினத்தையொட்டி, பாதுகாப்புப்படையினரும், தேசிய மாணவர் படையினரும் அணிவகுப்பு நடத்தினர்.

தமிழகத்தில் பிஜேபி சார்பில் சென்னை கிண்டியில் அமைந்துள்ள சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு முன்னாள் ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

சென்னை ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் இன்று நடைபெற்ற ஒற்றுமை மாரத்தானில் வெற்றிபெற்றவர்களுக்கு தலைமை நிலைய துணை ஆணையர் திரு மகேஷ்வரன் பரிசுகளை வழங்கினார்.

இந்நாளையொட்டி, மத்திய அரசு அலுவலகங்களில் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்கப்பட்டது.

<<<<<<>>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்புத்துறையில் அடுத்த பத்தாண்டுகளில் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு Pete Hegseth- உடன் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஆலோசனை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இருநாடுகளுக்கு இடையே பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் அறிக்கையை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இன்று பட்னாவில் வெளியிட்டது.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், பிஜேபி-யின் பீகார் தேர்தல் பொறுப்பாளர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இணைந்து இதனை வெளியிட்டனர்.

இந்த தேர்தல் அறிக்கையில் ஒரு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் திறன் பயிற்சி மையங்கள், மகளிர் தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்கான திட்டம், பத்து புதிய தொழில் பூங்காக்கள், இலவச கல்வி, விவசாயிகளுக்கு கிஷான் நிதியுதவி அதிகரிக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

<<<<<<>>>>>>

சூடான் பகுதியில் அதிகரித்துவரும் வன்முறை சம்பவத்திற்கு ஐ நா பாதுகாப்பு சபை கவலை தெரிவித்துள்ளது.

சூடானின் El Fasher பகுதியில் மக்களுக்கு எதிராக RSF அமைப்பு நடத்தும் தாக்குல்களை ஐ நா பாதுகாப்பு சபை கடுமையாக கண்டித்துள்ளது.

<<<<<<>>>>>>

நேபாளத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் பல்வேறு சாலைகள் சேதமடைந்துள்ளன.

நேற்றிரவு முதல் பெய்துவரும் மழை காரணமாக, Ilam – Rajduwali பகுதியில் உள்ள சாலை சேதமடைந்து வாகன போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*காட்மாண்டுவுக்கு சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 33 பேர் காயமடைந்துள்ளனர்.*

*நேபாள காவல்துறையினர் காயமடைந்தவர்களை மீட்டு பரத்பூர் மருத்துவமனையில் அனுமதித்தனர்.*

*<<<<<<>>>>>>*

*இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப்பயணிகள் மின்னணு பயண அட்டைகள் பெற தேவையில்லை என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.*

*இலங்கை வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இம்மாதம் 15-ஆம் தேதியிலிருந்து இந்த செயல்பாடு அமலுக்கு வந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

*இதனை பயன்படுத்தி கூடுதல் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு எளிதாக பயணம் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*மேற்குவங்கம், சிக்கிம் மற்றும் பீகார் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*உத்தரப்பிரதேசம், குஜராத், அந்தமான் நிக்கோபார் தீவு பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே, Mohtha புயல் வடக்கு திசையை நோக்கி நகர்ந்து, சத்தீஸ்கர் அருகே அடுத்த 24 மணிநேரத்திற்குள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.*

*மெல்பர்னில் இப்போட்டி இன்று பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.*

*<<<<<<>>>>>>*

தென்னாபிரிக்கா ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் உணவு இடைவேளைவரை விக்கெட் இழப்பின்றி 71 ரன் எடுத்துள்ளது.

பெங்களூவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்கா ஏ அணி முதல் இன்னிங்சில் 309 ரன் எடுத்துள்ளது.

<<<<<<>>>>>>

ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-9, 21-18 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் Julie Dawall - ஐ வென்றார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – அமெரிக்காவின் Reese Stalder இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Jay Clarke – Tom Hands இணையை வென்றது.

<<<<<<>>>>>>

உலகக் கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்திற்கு முன்னேறிய இந்திய அணிக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>